**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 418/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | திருமதி. பாப்பா |
| Father's Name/Husband Name: | திரு. தனவேல் |
| Village : | கோவில்பாளையம் |
| Taluk : | பெரம்பலூர் |
| Age : | 55 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 19.08.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1, 2, 3 ஆஜர் இல்லை . அவருக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் வேலை செய்து வருகிறேன். ப.சா.2 தனவேல் எனது கணவர். எதிரிகள் கரும்பாயிரம், முருகன் மற்றும் அஞ்சலை ஆகியோர்களை தெரியும். என்னுடைய தம்பி சுந்தரவடிவேல் என்பவருக்கு சொந்தமான வயல்காடு ஓலைப்பாடி கிராமத்தில் உள்ளது. அந்த வயலில் நான் தான் விவசாய வேலை செய்து வருகிறேன். சம்பவத்திற்கு முன்பாக எனது தம்பி சுந்தரவடிவேலுக்கும், கரும்பாயிரம் குடும்பத்திற்கும் இடையே நிலப் பிரச்சனை இருந்து வந்தது. சம்பவம் நடந்து சுமார் 5 வருடங்கள் இருக்கும். 5 வருடங்களுக்கு முன்பு மாலை 5.30 மணியளவில் நானும் எனது கணவரும் பருத்திக்கு வேலி போட்டுவிட்டு வயலில் இருந்தோம். எதிரி கரும்பாயிரத்தின் அண்ணனும் கண்ணன் மனைவி அஞ்சலையும் அங்கு வந்தனர். நான் அவர்களிடம் பருத்திக்காக வேலி போட்டு இருக்கிறேன் என்று எதிரி கரும்பாயிரத்திடம் சொன்னேன். கரும்பாயிரம் என்னை பார்த்து உனக்கு என்னடி வேலை அங்கிருந்து இங்க வந்து

என்ன வேலை செய்யுற. அசிங்கமாக தேவிடியா, குச்சிக்காரி என்று பேசி உனக்கு சுந்தரம் வடிவேல் காட்டில் என்னடி வேலை என்று சொல்லி அடைப்பு போட்டிருந்த ஒரு கட்டையால் என்னை அடித்து கீழே தள்ளி மிதித்தார். எதிரி கரும்பாயிரம் கட்டையால் என் முதுகில் ஒரே அடி அடித்தார். அதன்பின்பு எதிரி கரும்பாயிரத்தின் அண்ணனும் அவருடைய மனைவியும் என்னை கையாலும், காலாலும் உதைத்தனர். எனது கணவரையும் எதிரிகள் மூவரும் சேர்ந்து அடித்தார்கள். எனது சுந்தர வடிவேலு என்னையும் எனது கணவரையும் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் நான் இருந்த போது போலிசார் சம்பவம் குறித்து விசாரித்தனர். நான் போலிசாரிடம் சம்பவம் குறித்து வாக்குமூலம் சொன்னேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நாள் அளித்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. நான் ஒரு வார காலம் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். எனது தம்பி சுந்தரவடிேலும் ஓலைப்பாடியில் தான் குடியிருந்து வருகிறார். அவரது தகப்பனார் பெயர் சடையப்பன். எனது தம்பி லாரி ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறார். நான் அளித்த புகார் சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் நீதிமன்றத்தில் முதல்நிலை சாட்சியம் அளித்ததுபோல் தான் போலிசார் விசாரணையில் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். போலிசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் ஒரு முறை விசாரித்தார்கள். போலிசார் ஒரு முறை விசாரித்ததில் எந்த இடத்தில் வைத்து என்னை விசாரித்தார்கள் என்றால் நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும்போது போலிசார் என்னை விசாரித்தார்கள். சம்பவம் நடந்த அன்று சம்பவ இடத்தில் நான் காலையில் இருந்து வயலில் வேலி போட்டு கொண்டு இருந்தேன் என்றால் சரிதான். கருவேலியை எதைக் கொண்டு வெட்டினேன் என்றால் வாங்கு அருவாள் வைத்து வெட்டினேன். வாங்கு அருவாளை வைத்து நானும், எனது கணவரும் மற்றும் எனது தம்பி சுந்தரவேலும் வேலியை அடைத்தோம் என்றால் சரியல்ல. நானும் என் கணவரும் மட்டும் தான் அடைத்தோம். எனது தம்பி அப்போது இல்லை. எனது வயலுக்கும் எதிரிகளின் வயலுக்கும் சேர்ந்தார் போல் வேலியை கொண்டு அடைத்தோம் என்றால் சரியல்ல. நான் வேலியை அடைக்கும்போது 2ம் எதிரி முருகன் அதைக்கேட்டதற்கு நீங்கள் வேலி

அடைக்கும்போது அதை நான் எடுத்து விடுவேன் என்று எனது புகாரில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்றால் மாலை 5 அல்லது 5.30 இருக்கும். எங்களது ஊரிலிருந்து பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு எப்படி வந்தோம் என்றால் 108 ஆம்புலன்சு மூலமாக வந்தோம். 108 ஆம்புலன்சு எத்தனை மணிக்கு வந்தது என்றால் எனக்கு நினைவில்லை. நான் எத்தனை மணிக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன் என்றால் இரவு 8 மணியிருக்கும். யார் யாருடன் மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் நான் எனது கணவர் மற்றும் எனது தம்பி சுந்தரவடிவேல் ஆகிய மூவரும் மருத்துவமனைக்கு வந்தோம். மருத்துவர் என்னிடம் காயம்பட்ட விவரத்தை விசாரித்த போது நான் என்ன கூறினேன் என்றால் நான் என்ன கூறினேனோ அதை அப்படியே எழுதிக்கொண்டார். நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் நான் சொல்வது போல் மாலை 5 அல்லது 5.30 மணிக்கு சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் 108 ஆம்புலன்சு மூலம் மருத்துவமனைக்கு வந்திருந்தால் சம்பவம் நடைபெற்ற 45 நிமிடத்தில் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு வந்து சேர்ந்திருப்போம் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது தம்பி மருத்துவமனைக்கு எங்களை கொண்டு போய் சேர்க்கவில்லை என்றாலும், நானும் எனது கணவரும் மருத்துவமனைக்கு சென்றோம் என்றாலும் சரியல்ல. மேல் கண்ட வயல் பிரச்சனை சம்பந்தமாக சிவில் வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதா என்றால் உள்ளது. எனது அப்பா சடையன் கரும்பாயிரம் என்பவருக்கு சம்பவம் நடைபெறும் நிலைத்தை விற்று விவரம் தெரியுமா என்றால் தெரியும். எனது தந்தை கரும்பாயிரம் குடும்பத்திற்கு நிலத்தை விற்று சுமார் 40–50 வருடம் இருக்குமா என்றால் இருக்கும். நாங்கள் சொத்தை விற்றுவிட்டு கரும்பாயிரம் குடும்பத்தாரிடம் சொத்து கொடுக்கமுடியாது என்று சொன்னது தான் பிரச்சனை என்றால் சரியல்ல. எதிரிகள் இடத்தில் நான் சென்று அடைப்பு போட்டேன் என்றால் சரியல்ல. எதிரி கரும்பாயிரம் ஏன் எனது இடத்தில் வேலி போடுகிறீர்கள் என்று கேட்டாரா என்றால் கேட்டார். நான் வேலி போட்டுவிட்டு வேலி போட என்னன்ன பொருட்கள் பயன்படுத்துவார்களோ அதையெல்லாம் மற்றும் அருவாள் ஆகியவை அருகில் வைத்துக் கொண்டு சம்பவ இடத்தில் இருந்தோம் என்றால் சரிதான். எதிரி கரும்பாயிரம் ஏன் வேலி போடுகிறீர்கள் என்று கேட்டதற்கு நானும் எனது கணவரும், எனது தம்பி

சுந்தரவடிவேலும் எதிரி கரும்பாயிரத்தின் வலது பக்க தலையில் அடித்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் வெட்டிதால் எதிரி கரும்பாயிரம் சம்பவ இடத்தில் மயங்கி விழுந்தார் என்றால் சரியல்ல. அதன்பிறகு 2ம் எதிரி மற்றும் 3ம் எதிரிக்கு தகவல் கிடைத்து அவர்கள் மூலம் 108 ஆம்புலன்சு வரவழைக்கப்பட்டு எதிரி கரும்பாயிரத்தை சிகிச்சைக்கு கொண்டு மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றால் சரியல்ல. நானும் எனது கணவர் மற்றும் எனது தம்பி சுந்தரவடிவேலும் சேர்ந்து எதிரிகளை தாக்கியதால் குன்னம் காவல் நிலையத்தில் குற்ற எண் 218/2019 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளது என்றால் சரியல்ல. மேற்கண்ட குற்ற எண் சம்பந்தமாக நானும் எனது கணவரும் எனது தம்பி சுந்தரவடிவேலும், எதிரிகளாக இந்நீதிமன்றத்தில் ஆஜர் ஆகிறோம் என்றால் சரியல்ல. எதிரி கரும்பாயிரத்துக்கு காயம் ஏற்பட்டு அவர் 108 ஆம்புலன்சு மூலம் மருத்துவமனைக்கு கொண்டு சென்று பின்புதான் நானும் என் கணவரும் வழக்கிற்காக பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் வந்து சேர்ந்தோம் என்றால் சரியல்ல. இரவு 10.45 மணிக்கு தான் நான் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் வந்து சேர்ந்தோம் என்று மருத்துவ சான்றிதழில் குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. கரும்பாயிரத்தை தாக்கிய வழக்கிலிருந்து தப்பிக்கவே நாங்கள் எதிரிகளின் மீது பொய்யாக வழக்கு தொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகள் எங்களை தாக்கிய ஆயுதத்தை போலிசார் விசாரணையில் நான் கொடுத்தேனா என்றால் இல்லை. எதிரிகள் எந்த ஆயுதங்களையும் கொண்டு சம்பவ இடத்திற்கு வந்தார் என்றால் சரியல்ல. எதிரிகள் எத்தனை லிட்டர் பெட்ரோல் எடுத்து வந்தார்கள் என்றால் ஒரு லிட்டர். எதிரிகள் கொண்டு வந்த தண்ணீர் கேனை நான் தவறாக பெட்ரோல் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு அவர்கள் பெட்ரோல் கொண்டு வந்திருந்தால் பெட்ரோல் கொண்டு வந்த பொருட்களை நான் போலிசார் விசாரணையில் கொடுத்திருப்பேன் என்றால் நான் அப்போது மருத்துவமனையில் இருந்தேன். வழக்கு சாட்சி பட்டியலில் உள்ள நபர்கள் அனைவரும் என்னுடைய சொந்தக்காரர்கள் என்றால் பங்காளி உறவினர்கள். பட்டியல் சாட்சியாக உள்ள எனது பங்காளிகளுக்கு வழக்கு சம்பவ இடத்திற்கு பக்கத்தில் காடு உள்ளதா என்றால் இல்லை.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.